**மாத்தளை பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 15 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாத்தளை பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய மீள்நிரப்பப்பட வேண்டிய நிலுவை சம்பளம் ரூபா 9,596,044 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டில் பெக்கோ இயந்திரத்தை வாடகைக்கு வழங்குதல் வருமானம் ரூபா 52,950 குறைத்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 6,500 பெறுமதியான பொருட்கள் கணக்கீடு செய்யப்படாமை மற்றும் 02 அலுவலக மேசைகளின் பெறுமதி குறைத்து கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நிலையான சொத்துக்கள் ரூபா 13,957 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஆண்டின் முத்திரை வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய முத்திரைக்கட்டண வருமானம் ரூபா 724,150 கூடுதலாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) துண்டுகளாக்கி விற்பனை செய்த லொக் நகர்தோட்ட காணியில் பொது வசதிகளுக்காக 2014 மே 02 ஆந் திகதி சபைக்கு கையேற்கப்பட்டிருந்த ரூபா 100,000 பெறுமதியான காணி துண்டின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 27,607,825 தொகையான 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 208,495 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்

கிடைக்க வேண்டிய 09 கணக்கு மீதிகள் ரூபா 29,966,961 பெறுமதியாக இருந்ததுடன் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 1,016,407 மீதிகள் அதில் உள்ளடங்கியுள்ளது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

செலுத்த வேண்டிய 10 கடன்கொடுத்தோர் கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 13,651,564 ஆக இருந்ததுடன் 03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 3,739,845 தொகையான 04 மீதிகளும் அதில் உள்ளடங்கியிருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 475,078 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 19,480,163 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,288,566 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 4,191,597 அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 நீர்க்கட்டணம்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 4,615,301 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 2010, 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் செயற்பாடற்றுக் காணப்பட்ட 04 நீர் முறைமைகளுக்குரிய ரூபா 1,089,541 தொகை நிலுவை மீதியாக இருந்ததுடன் நீர்ப் பட்டியல் செலுத்தப்படாததன் பேரில் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் துண்டிக்கப்பட்ட 08 நீர் முறைமைகளுக்குரிய 214 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 820,318 ஆன நிலுவை நீர்க் கட்டண மீதியும் காணப்பட்டது.

(ஆ) நீர்மானிகள் செயற்படாதிருந்த நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து தொடர்ச்சியாக ரூபா 300 வீதம் மாதாந்தம் குறைந்த நிலையான கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்ததுடன், புதிய நீர்மானிகள் பொருத்தப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற நீர் அலகுகளின் அடிப்படையில் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாதிரிகளாக 05 நீர் முறைமைகளுக்குரிய 42 பாவனையாளர்கள் தொடர்பாக நீர்மானிகள் செயற்படுத்தப்படாமையால் ரூபா 300 மாதாந்தக் கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.2 ஆதனவரி

ரூபா 909,396 ஆன நிலுவை ஆதனவரி மீதியொன்று காணப்பட்டதுடன் 1988 இன் பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் (நிதி மற்றும் நிர்வாகம்) 33 விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 227,025 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதி காணப்பட்டது.

### 2.2.4 ஏனைய வருமானம்

2013 நவம்பர் 29 ஆந் திகதிய 1838/55 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உப விதியின் iv (அ) பகுதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வீதிகள் மற்றும் சிறு வீதிகளிலும் கனரக வாகன வரையறுத்தல் கட்டணங்கள் அறவீடுகளின் கீழ் கருங்கற்கள் மற்றும் டொலமைட் அண்மித்த உற்பத்திகளை போக்குவரத்துச் செய்யும் வாகனங்களிலிருந்து 2015 ஆம் ஆண்டிற்காக கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

வாகன நிறுத்தற் கட்டணம் ரூபா 17,000 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 987,347 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 17,481,140 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தன. அதில் 2016 மே 26 ஆந் திகதி வரையிலும் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 238,532 உம் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 12,592,500 ஆகவும் இருந்தன.

### 2.3 மிகைக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்குரிய ரூபா 1,426,708 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையில் வெற்றிடங்கள் காணப்படாத 07 பதவிகளுக்காக 2014 நவம்பர் மாதம் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தமையால் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து 14 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) சபை தீர்மானத்தின் பேரில் 2011 ஆம் ஆண்டு முதல் நீர்மானி வாசிப்பாளரொருவர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், பதவியின் தேவைப்பாட்டினைக் கருத்திற் கொண்டு அப்பதவியை பதவியணியின் நிரந்தர ஊழியர்

பதவியொன்றாக அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் சபை நிதியத்திலிருந்து ரூபா 348,427 சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வியாபார அனுமதிப்பத்திர பதிவேட்டின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டிய 85 வியாபாரங்களில் 64 இற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1995 திசெம்பர் 27 ஆந் திகதிய 95/9 ஆம் இலக்க மாகாண தலைமை செயலாளரின் கணக்குகள் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் வேலையை விட்டுச் சென்ற 9 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10,097 தொகையான நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 1647(அ) நியதின் பிரகாரம் வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபைக்குரிய பலாபத்வல பொது நூலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்த கணிப்பீட்டின் பிரகாரம் ரூபா 7,342 பெறுமதியான 82 புத்தகங்களின் பற்றாக்குறை தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 இன் பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 132 ஆம் பிரிவில் இடமளிக்கப்படாத முன்பள்ளி சீருடை மற்றும் சீருடை வைத்தல் காப்பகம் வழங்கல் தினப்பதிவேடு அச்சிடல், உறுப்பினர்களுக்கு கையொப்ப பேனாக்கள் வழங்கல் போன்ற செயற்பாடுகளுக்காக 04 சந்தர்ப்பங்களில் ரூபா 457,321 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2015 மே 13 ஆந் திகதி சபை கலைக்கப்பட்டிருந்த போதிலும் தலைவர் உட்பட உறுப்பினர்களுக்கு மே மாதத்திற்கான முழுப் படிகள் செலுத்தப்பட்டமையால் 18 உறுப்பினர்களுக்கு ரூபா 170,500 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) வாரத்தில் வேலை செய்யக்கூடிய நாட்களுக்காக விடுமுறை தினக்கொடுப்பனவு செலுத்த முடியாத போதிலும், சபையினால் பராமரித்துச் செல்லப்படும் இலசவ ஆயுர்வேத நிலையத்தின் மருத்துவரின் வெற்றிடத்திற்காக வாரத்திற்கு 2 நாட்கள் தென்ன ஆயுர்வேத நிலையத்தின் இரண்டு மருத்துவர்களின் ஒத்துழைப்பினை பெற்று அம்மருத்துவர்களுக்கு அடிப்படை சம்பளத்தில் 1/30 என ரூபா 74,584 ஆன விடுமுறை தினக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் 08 நீர் காப்பாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டில் ரூபா 406,064 ஆன படிகள் சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்கப்ட்டிருந்த 35 ஊழியர்களுக்கு மேலதிகமாக 180 நாட்கள் பூர்த்தி செய்யாதிருந்த 05 ஊழியர்களுக்கும் மீண்டும் அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 04 ஊழியர்களுக்கு ஆண்டில் ரூபா 1,352,753 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2012 மார்ச் 23 ஆந் திகதிய 3/2/2/4 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் உறுப்பினர்களுக்காக உரிய உள்ளூராட்சி மன்றத்தின் நிதியத்திலிருந்து நிதிஏற்பாடு மேற்கொள்ளும் நோக்கில் மாதாந்தம் ரூபா 1,000 ஆன தொலைபேசிப் படிகள் மாத்திரம் செலுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் சபையின் உப தலைவரின் வீட்டுத் தொலைபேசிக்காக மீளாய்வாண்டின் சனவரி முதல் மே மாதம் வரையான காலப்பகுதிக்காக அவ்வெல்லையை மிகைத்து ரூபா 17,223 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.4 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

### 3.4.1 அபிவிருத்தி திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமை

2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த அபிவிருத்தி திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 9,800,000 பெறுமதியான 41 அபிவிருத்தி செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 பிரதேச சபை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

2015 ஆம் ஆண்டிற்காக பிரதேச சபை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 6,000,000 ஆன நிதிஏற்பாட்டில் 15 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 3,500,000 தொகையான 10 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 ரத்மல்கஹ மற்றும் உக்குவல அணைக்கட்டை அமைத்தல்

வீடமைப்பு மற்றும் சமுர்ததி அமைச்சின் மூலம் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அண்மித்து கிராம எழுச்சி நிகழ்ச்சித்திட்டம் - 2015 இன் கீழ் ரூபா 380,609 செலவிடப்பட்டிருந்த ரத்மல்கஹ மற்றும் உக்குவல அணைக்கட்டை அமைக்கும் செயற்திட்டத்தின் வேலை விடய இலக்கம் 02 இன் பிரகாரம் ஒப்பந்தக்காரரால் 24.5 கன மீற்றர் கொங்கிரீட் சுவர் நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும், நிர்மாணிக்கப்பட்ட கொங்கிரீட் சுவர் 15.26 கன மீற்றராக இருந்தது, நிர்ணயிக்கப்பட்ட அளவில் கொங்கிரீட் சுவர் நிர்மாணிக்கப்படாததன் காரணமாக வயல் வெளிக்குள் வெள்ளம் வருவது கட்டுப்படுத்தப்படாதிருந்தமையால் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்தமை 2016 ஏப்ரல் 07 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

### 3.4.4 கவடாயமுன சனசமூக மண்டப நிர்மாணம்

கிராம எழச்சி நிகழ்ச்சித்திட்டம் - 2015 இன் கீழ் நகவடாயமுன சனசமூக மண்டப நிர்மாணத்தின் நிர்மாணத்திற்காக ரூபா 689,680 செலவிடப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டின் / வேலை முடிவு அறிக்கையின் வேலை விடய இலக்கம் 10 இன் கீழ் விசேட நிலைமையிலான கனமான மரப்பலகை பயன்படுத்தி யூனியன் லொக் மற்றும் உயர் தரமான சரனேர் பாவித்து உயர் தரத்திலான கதவொன்றை அமைப்பதற்காக ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 17,371 வீதம் 1.89 சதுர மீற்றருக்கு ரூபா 32,831 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் பலகைக்கு இடையே 1/4 – 1/2 இடையிலான அளவில் இடைவெளி காணப்படும் வகையில் இக்கதவில் பலகைகள் பொருத்தப்பட்டிருந்தமையால் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்ததன் பிரகாரம் உயர் தரத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேலை விடயம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.4.5 நிக்கவெல சீ பகுதி சுற்றுவட்ட வீதியை அபிவிருத்தி செய்தல்

கிராம எழச்சி நிகழ்ச்சித்திட்டம் - 2015 இன் கீழ் நிக்கவெல சீ பகுதி சுற்று வட்ட வீதியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 489,410 செலவிடப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட 9 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் வீதியின் மேற்பரப்பில் மண்ணை நிரப்பி அமைப்பதற்காக ஒரு கனமீற்றருக்கு ரூபா 2,005.15 வீதம் 6.80 கன மீற்றருக்காக ரூபா 13,685 தொகை உட்படுத்தப்பட்டு வேலை விடயம் பூர்த்தி செய்யப்பட்டதாக வேலை பூர்த்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட தொகையே ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், வீதியின் இரண்டு பக்கத்திலும் மண் நிரப்பப்படாதிருந்தமை 2016 மார்ச் 30 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

### 3.4.6 படிவிட்ட வெலகம விவசாய நிலைய நிர்மாணம்

பொது நிதியத்தின் கீழ் படிவிட்ட வெலகம விவசாய நிலையம் ரூபா 981,000 தொகையில் நிர்மாணிப்பதற்கு விவசாய அமைப்பொன்றுடன் 2015 பெப்ரவரி 19 ஆந் திகதி உடன்படிக்கை செய்து ரூபா 327,933 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை செய்திருந்த 15 வேலை விடயங்களில் 8 வேலை விடயங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு 2015 மார்ச் 02 ஆந் திகதி செயற்திட்டம் கையளிக்கப்பட்டிருந்தது, ஒப்பந்தக்காரர் உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகளை மேற்கொள்ளாமை தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அல்லது பூர்த்தி செய்யாத வேலை விடயங்களை பூர்த்தி செய்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று ஈடுபடுத்தவோ நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையால் தீர்வுசெய்யப்பட்ட பட்டியலின் பெறுமதியான ரூபா 327,933 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது.

### 3.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் பலாபத்வெல நிர்மாணிக்கப்பட்டிருந்த கூட்டுப்பசளை பிரிவில் 04 தொழிலாளர்களைப் ஈடுபடுத்தி தெரிவுசெய்து நாளாந்தம் 400 கிலோகிராம் அளவில் கூட்டுப்பசளை உற்பத்தி செய்யப்படுகின்றது. சேகரிக்கப்பட்ட கழிவுகளில் 40 சதவீதமான அளவில் பொலித்தீன் அகற்றுவதற்கு முறையான திட்டமொன்று பின்பற்றப்படாது மண்ணால் மூடும் நடைமுறை பின்பற்றப்பட்டிருந்தது.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவும்

**விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நாடளாவிய ரீதியில் தகவல் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தும் முன்னுரிமை, ஈ - சில்ப செயற்திட்டத்தின் கீழ் தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சிடமிருந்து 40 கணனிகள், 40 கதிரைகள், 40 மேசைகள் மற்றும் புரொஜெக்டரொன்றும் 2014 திசெம்பர் 10 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமையால் குறித்த பொருட்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) ரூபா 30,000 கிரயமான 111-3207 மோட்டார் சைச்கிள் 03 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது பிரதேச சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் வருமான செலவின விடயங்களுக்கிடையே நிதி ஏற்பாடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) 32 வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 10 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டதுடன், மதிப்பிடப்பட்ட கேள்வி வருமானம் ரூபா 22,000,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் கேள்வி வருமானம் எதுவும் அறவிடுவதற்கு சபைக்கு முடியவில்லை.

(ஆ) 26 செலவின விடயங்களுக்கான ரூபா 3,340,000 தொகையான நிதி ஏற்பாடுகளில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாமல் முழு நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 77 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 05 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமை ஒன்று பேணப்பட்டிருக்கிவல்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) மனித வள முகாமைத்துவம்
(ஊ) வாகன நிர்வாகம்
(எ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஏ) ஒப்பந்த நிருவாகம்
(ஐ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்